INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# ஊடக அறிவிப்பு

## திகதி வரை தடையாணை

திகதி : 26 November 2024
நேரம் : 4:00 PM Sri Lanka Time

## மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info 'at' ihp.lk

## பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi 'at' ihp.lk ட்விட்டர் : @ravirannaneliya

## *ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மக்களுக்கு முக்கிய நிறுவனங்கள் மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளது*

செப்டம்பர் 2024 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நிறுவனங்கள் மீது இலங்கையர்களுக்கு உள்ள நம்பிக்கையில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டை சுகாதார கொள்கை நிறுவனத்தின் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு (SLOTS) காட்டுகின்றது.



உயர் நீதிமன்றம் மிகவும் நம்பகமான நிறுவனமாக தொடர்ந்தது. நீதிமன்றங்கள் மற்றும் முப்படைகள் அதனைத் தொடர்ந்தன. உச்ச நீதிமன்றம் மற்றும் நீதிமன்றங்கள் மீதான நம்பிக்கை இரண்டு மடங்கிற்குமேல் அதிகரித்துள்ளதோடு, தேர்தலின் முன்னர் காணப்பட்ட 30%இல் இருந்து, தேர்தலின் பின்னர் முறையே 72% மற்றும் 62% சதவீதங்களுக்கு அதிகரித்துள்ளன.

அதேபோன்று, தொழிற்சங்கங்கள் மற்றும் பாராளுமன்றத்தின் மீதான நம்பிக்கை ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து சாதகமான மாற்றங்களைக் காட்டியுள்ளது. இருப்பினும் காவல்துறை மீதான நம்பிக்கை ஒப்பிட்ட அளவில் மாற்றமில்லாமல் இருந்ததோடு, 32% மிகவும் குறைவான நம்பிக்கை உள்ளது அல்லது நம்பிக்கையில்லை என்று கூறியிருந்தனர்.

## IHP பற்றி

இந்த கருத்துக்கணிப்பை ஆணையிடுவதற்கும் வடிவமைக்ககவும் IHP மட்டுமே பொறுப்பு, மேலும் இதற்கு முழு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறது. IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிப்புகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு, இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் மூன்று தசாப்தங்களாக பல கருத்துக்கணிப்புகளை நடத்தியுள்ளார்.

## முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தோரின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. அனைத்து மதிப்பீடுகளும், வயது, பாலினம், மாகாணம், துறை, சமூகபொருளாதார நிலை, இனக்குழு, மற்றும் கல்வி போன்ற பண்புகள் உள்பட தேசிய சனத்தொகையை பிரதிநிதித்துவப்படுத்தமாறு எடையிடப்பட்டன.

## நிதியுதவி

IHP, இலங்கையின் சுகாதாரம், சமூக நிலைமைகள் மற்றும் மக்களின் கருத்துக்களில் ஏற்படும் மாற்றங்களை கணிப்பதற்காக SLOTS கருத்துக்கணிப்பை நடத்துகின்றது. கருத்துக்கணிப்பை உருவாக்க, ஆணையிட மற்றும் வடிவமைக்க IHP மட்டுமே பொறுப்பாகும், மேலும் அதற்கான முழுப் பொறுப்பையும் IHP ஏற்றுக்கொள்கின்றது. பேட்டிகள், IHP ஊழியர்களால் தினமும் தொலைபேசியினுடாக நடத்தப்படுகின்றன. இது தேசிய கள ஆய்வு மூலம் ஆட்சேர்க்கப்பட்ட அல்லது எழுமாறாக தொடர்புகொள்ளப்பட்ட கையடக்கத் தொலைபேசி அழைப்புகளை உள்ளடக்கிய பதிலளிப்பவர்களுடன் நடாத்தப்படுகின்றது. SLOTS களப்பணியானது 2021 ஆம் ஆண்டு முதல் பல்வேறு நிதியுதவியாளர்களால் ஆதரிக்கப்படுகின்றது. இவர்கள் கேள்வி வடிவமைப்பு, தரவுப் பகுப்பாய்வு அல்லது அறிக்கையிடல் ஆகியவற்றில் எந்தப் பங்கையும் வகிப்பதில்லை. முன்பு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை (Neelan Tiruchelvam

Trust), ஆசியா மன்றம் (Asia Foundation), ஐரோப்பிய ஆணையகம் (European Commission), ஐக்கிய இராச்சியத்தின் உடல் நலப் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK National Institute for Health and Care Research), ஓபன் சொசையட்டி அறக்கட்டளை நிறுவனம் (Foundation Open Society Institute) மற்றும் வேறு சிலர் நிதி வழங்கியுள்ளனர். தற்போதைய களவேலைகளுக்கு வேலக்ஸ் ஸ்டிப்டங் அறக்கட்டளை(Velux Stiftung Foundation), அபுதாபி நியூயார்க் பல்கலைக்கழகம் (New York University Abu Dhabi), யு .எஸ். எயிட் (USAID) மற்றும் IHP பொது நலன் ஆராய்ச்சி நிதி ஆகியன நிதியளித்துள்ளன. மேலும் ஆய்வின் முடிவுகள், தற்போதைய மற்றும் முந்தைய நிதியுதவியாளர்களின் கருத்துக்கள் அல்லது நிலைகளை பிரதிபலிப்பதில்லை. மேலும் விரிவான தரவு மற்றும் முடிவுகளைப் பெற விரும்புவோர் IHP நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம்.